பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 1.00

சுடர்: 6 பிரமோதூத ஷு மார்கழி மீ 19 உ வியாழக்கிழமை (03-01-1991) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 38

## யுத்த நிறுத்த அழைப்புக் குறித்து

# கட்சி தலைவர்களுடன் பிரேமா இன்று பேச்சு!

முச்சந்தி முரளி



மதக்காரருக்கு மசிஞ்சு, மௌனம் சாதிச்சிட்டார் போலை......!

## கண்டியில் ஜனாதிபதி 'மௌனம்'; நேற்று முடிவு அறிவிக்கப்படவில்லை

கொழும்பு, ஜனவரி. 3

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்த அழைப்புக் குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களுடன் ஜனாதிபதி பிரேமதாஸா இன்று பேச்சு நடத்துவார் என ஜனாதிபதி செயலகம் நேற்றுத் தெரிவித்தது.

நேற்று கண்டி தலதா மாளிகையின் எண்கோணமண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, தமது உரையில் புலிகளின் இந்த அழைப்புக் குறித்து முடிவு எதனையும் வெளியிடவில்லை.

இந்த உரையின்போது ஜனாதிபதி அரசின் முடிவை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என பல பிரபல செய்தி ஏஜென்ஸிகள் உட்பட தகவலறிந்த பல வட்டாரங்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் ஜனாதிபதி அது குறித்து கருத்து எதனையும் திட்டவட்டமாக வெளியிடாமல் சகலரையும் ஆச்சரியத்துக்கு உள்ளாக்கினார்.

கடைசி நேரத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளே ஜனாதிபதியின் திடீர் மௌனத்துக்குக் காரணமாக இருக்கலாம் என ஊகிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

இன்று ஜனாதிபதி அரசியற் கட்சித் தலைவர்களைச்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு - கிழக்கில் 48 மணி நேர அமைதி

கொழும்பு, ஜன. 3

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்த அறிவிப்பு அமுலுக்கு வந்து 48 மணி நேரங்கள் வரை— நேற்று இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை - பெரும் அசம்பாவித சம்பவங்கள் ஏதும் வடக்கு, கிழக்கில் இடம்பெறவில்லை. சுயாதீன செய்திச் சேவைகள் இத்தகவல்களை வெளியிட்டன

தமது யுத்த நிறுத்த அறிவிப்பை விடுதலைப் புலிகளும்—

தாக்குதல் நடவடிக்கை நிறுத்தத்தை அரச படையினரும் பொதுவாகத்தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## யுத்த நிறுத்த மீறல்; அரசு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன 3

வடக்கில் நேற்று இரண்டு இடங்களில் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் இடம் பெற்றதாக ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் குற்றஞ் சாட்டின.

ஆனையிறவு, கட்டுவன் பகுதிகளில் நேற்று ஆயுதப் படையினரின் நிலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப் பட்டதாகவும்—

பெரும் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## புலிகள் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3

வடக்கில் இரண்டு இடங்களில் நேற்று யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் இடம் பெற்றதாக அரச தரப்பில் கூறப்பட்டதை விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மறுத்தன. [உ]

## வெளிநோயாளருக்கு மலசலகூடம் இல்லை!

### வருவோர் திரிசங்கு நிலையில்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பிரிவுப் பகுதியில் மலசலகூடம் இப்போது இல்லை. ஏற்கனவே இருந்த மலசலகூடங்கள் இப்போது பாவிக்க அனுமதிக்கப்படுவதில்லை.

இதனால் வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்கள் அவசரமாக இயற்கைக் கடனை கழிக்க திக்குமுக்காட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வயிற்றோட்டம் உள்ள நோயாளி சிகிச்சை பெற வந்த வேளையில் 'அவசரம்' எனில் ''திரிசங்கு சொர்க்க'' நிலையில் ஓடித் திரிய வேண்டிய பரிதாப நிலை.

வெளிநோயாளர் பகுதிக்கு சிகிச்சை பெற வரும் நோயாளிக்கு அவசர தேவையாக சிறுநீர் பரிசோதிக்க வேண்டி ஏற்பட்டால் பெரும் கவலைக்கிடமான நிலைமை.

அவர்கள் மறைவிடம் தேடி வீதி வழியே அலையும் அவலம். பெண் நோயாளர் என்றாலோ இன்னும் சங்கடம்.

இது இவ்வாறிருக்க, வெளி நோயாளர் பிரிவில் தண்ணீர் வசதியும் இல்லை. அதனால் ஏற்படும் கஷ்டங்களும் அனேகம். [ஒ-15]

## காரைநகரில் மிதிவெடி; இளைஞர் கால் இழப்பு

காரைநகர், நாராணி கேணிச் சந்திப் பகுதியில் வீதியின் அருகில் இறங்கி நடக்க முற்பட்ட இளைஞர் ஒருவர் மிதி வெடியில் சிக்கினார். அதனால் அவர் தமது இடது காலை இழக்க நேரிட்டது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கருங்காலியைச் சேர்ந்த கந்தசாமி சற்குணராசா [21 வயது] என்பவரே காலை இழந்தவர் ஆவார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள இவர், கடந்த 6 மாதங்களுக்கு முன்னரே திருமணம் செய்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-15]

## நயினாதீவில் இன்று படையினருடன் பேச்சு

கப்பலில் வரும் பொருள்களை காங்கேசன் துறை துறைமுகத்தில் இறக்குவது சம்பந்தமாக இன்று நயினாதீவு கடற்படை முகாமில் முக்கிய சந்திப்பு ஒன்று நடைபெற இருக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் கடற்படை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவர் என்று தெரிவிக்கப்பட்டது.

தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் நிலை குறித்தும் சந்திப்பின்போது ஆராயப்பட இருப்பதாக தெரிய வந்தது. [ஒ-3]

## பொருள்களின் விலை நாளுக்கு நாள் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 3

குடாநாட்டில் உணவுப் பொருள்கள் உட்பட சகல பொருள்களினதும் விலைகள் நாளுக்கு நாள் - நேரத்துக்கு நேரம் - வீழ்ச்சி அடைந்து கொண்டே வருகின்றன.

யானை விலை குதிரை விலையில் விற்கப்பட்ட பொருள்களை சுமாரான விலையில் வாங்கக்கூடிய நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

கண்ணால் காண முடியாது இருந்த சில பொருள்களும் தற்பொழுது மார்க்கெட்டுக்கு வந்து விட்டன.

பற்றரி, சீனி, சவர்க்கார வகைகள், தேங்காய், தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய் போன்றவற்றினதும் மற்றும் பல பொருள்களினதும் விலைகளில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி காணப்படுகிறது.

கொழும்பில் இருந்து போதியளவு பொருள்கள் வந்து கொண்டிருப்பதாலும், பதுக்கி வைக்கப்பட்டிருந்தவை திடீரென வெளியே 'தலை காட்டத்' தொடங்கியுள்ளதாலுமே பெருமளவு விலை வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. [ஒ 3]

## வடக்கில் தற்போது ஆசிரியர் லீவு எடுத்தால் சம்பளம் கிடையாது

யாழ்ப்பாணம், ஜன. 3

தற்போது ஓரளவு சுமுக நிலை தோன்றியுள்ளதால் ஆசிரியர்கள் விரைவாக இடைக்காலப் பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்து மாணவர்களை பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் வகுப்பேற்றப் பரீட்சைக்கு தயார் செய்ய வேண்டும்.

அது வரை ஆசிரியர்கள் லீவு எடுத்தால், அது சம்பளம் இல்லாத லீவாகவே கருதப்படும்.

—இவ்வாறு வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் நேற்று அறிவித்துள்ளார். [உ-5]

## அதிகளவு பயணிகள்

கொழும்பில் இருந்து வழமையைவிட பெரும் எண்ணிக்கையான பயணிகள் நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். (ஒ-3)

## செயலக ஊழியர்கள் வேளைக்கு 'ஓட்டம்'!

யாழ்ப்பாணம், ஜன, 3

யாழ் செயலகத்தில் நேற்று மிகக் குறைந்த எண்ணிக்கையான ஊழியர்களே மாலை 4.15 மணி வரை கடமை புரிந்தனர்.

பெரும்பாலான ஊழியர்கள் நேற்றுக் கடமைக்கு வந்திருந்த போதும், சுமார் 20 சதவீதமானோரே மாலை வரை கடமையில் இருந்தனர். ஏனையோர் வீட்டை நோக்கி ஓட்டம் பிடித்துவிட்டனர். கடந்த ஆறு மாதப் பழக்க தோஷம் போலும்!

நேரகாலத்தோடு வீட்டிற்குச் சென்றவர்களில் உயர் அதிகாரிகள் ஒரு சிலரும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது

செயலக ஊழியர்களை நேற்று முதல் (புதன்) காலை 8.30 மணியில் இருந்து மாலை 4 15 மணி வரை வேலை செய்யவேண்டும் என்று நேற்று முன்தினம் மேலதிக அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் கூட்டம் கூடி பணிப்புரை விடுத்திருந்தார் என்பது தெரிந்ததே. [ஒ-3]

## ஆயுதங்களை கீழே போடுமாறு கோருகிறது சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஜன. 3

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போடுமாறு அரசு வற்புறுத்த வேண்டும்.

— ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அழைப்புக் குறித்து கேட்டபோதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகரும் எம். பியுமான திரு. எல். வி. குணரட்ன இவ்வாறு கூறினார்.

''இந்த வீணான யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றே மக்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் விடுதலைப் புலிகளின் அழைப்பை ஏற்பதில் நாம் அவசரப்படக்கூடாது நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். முதலில் இந்த அழைப்பு விடுதலைப் புலிகளினால்தான் விடுக்கப்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழரை விடுவிக்க கப்பம்!

யாழ்ப்பாணம், ஜன. 3

புதுவருடப் பிறப்பன்று அம்பாறை மாவட்டம் திருக்கோயிலில் 40 தமிழர்களை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து தடுத்து வைத்திருப்பதாகவும்-

அவர்களில் 15 பேரை விடுவிப்பதற்குப் படையினர் கப்பம் கேட்பதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பொருள் தட்டுப்பாடு
# முல்லைத்தீவில் கஷ்ட நிலை

யாழ்ப்பாணம், ஜன 3
முல்லைத்தீவுப் பகுதியில் உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

அரசாங்கத் தரப்பில் உணவுக் கையிருப்பு எதுவுமே இல்லையென்று உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியும், திட்டமிடல் அதிகாரியும் தெரிவித்தனர்.

விமானக் குண்டு வீச்சு, பாதகமான கால நிலை என்பவற்றால் கப்பல்களில் இருந்து உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகள் தடைப்பட்டுள்ளன.

வவுனியாவில் இருந்து லொறிகள் மூலம் கொண்டு வரப்படும் உணவுப் பொருள்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

மாங்குளம் இராணுவ முகாம் வீழ்ச்சி அடைந்த பின்னர் இப்போது லொறிகள் அவ்வழியே செல்வதால் முல்லைத்தீவு [புதுக்குடியிருப்பு] ஊடாகச் செல்வதை நிறுத்திவிட்டன.

அதனால் உணவுப் பொருள் தட்டுப்பாடு மேலும் மோசமாகியுள்ளது. வசதி படைத்தவர்கள் கூட உணவுப் பொருள்களை வாங்க முடியாத அளவுக்கு விலைகள் உயர்ந்துவிட்டன.

இந்தக் கஷ்டமான நிலையை நீக்குவதற்கு, வவுனியாவில் இருந்து உணவு லொறிகள் அணி ஒன்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டுக் கொண்டனர்.

முல்லைத்தீவு மக்களின் நிலையை நேரில் கண்டறிவதற்காக கடந்த வாரம் அங்கு சென்ற யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் இக்கோரிக்கை விடப்பட்டது. [உ-3]

## சபாநாயகரை மிரட்டிய அமைச்சர்!

புதுடில்லி, ஜன. 3
இந்திய லோகசபை சபாநாயகர் ரபிரோயை சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி அச்சுறுத்தினாராம்!

சபாநாயகர் தமது அறையில் மத்திய அமைச்சர் சத்திய பிரகாஷ் மாளவியா சகிதம் பேசிக் கொண்டிருந்த போது டாக்டர் சுப்பிரமணியசுவாமி இப்படி நடந்துகொண்டதாக புதுடில்லி பத்திரிகைகள் நேற்று செய்திகள் வெளியிட்டன.

சபாநாயகர் ரபிரோய் கைது செய்யப்படுவார் என்றே சட்ட அமைச்சர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மிரட்டினாராம்.

வி. பி. சிங் தலைமையிலான ஜனதா தள் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற எம். பிக்கள் மீது கட்சித் தாவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும் விஷயத்தை சபாநாயகர் லோகசபையில் விவாதத்துக்கு அனுமதித்ததை எதிர்த்து வாதாடுகையிலேயே டாக்டர் சுப்பிரமணியசுவாமி இவ்வாறு மிரட்டினாராம்.

இந்தச் சம்பவம் பற்றி எதிர்க்கட்சிகள் நேற்று லோகசபைக் கூட்டத்தில் கேள்வி எழுப்பின.

நடந்தது உண்மையானால் தாம் தக்க நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கூறிய பிரதமர் சந்திரசேகர், நடந்தவற்றிற்கு மன்னிப்புக் கோரினார்.

இந்தச் சம்பவம் குறித்து சபாநாயகர் ரபிராய் நேற்று நண்பகல் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார் என்றும் —

அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு இன்று சபையில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## பிரிட்டிஷ் அதிகாரிகள் வருகை

யாழ்ப்பாணம். ஜன. 3
குழந்தைகள் பாதுகாப்பு நிதியத்தின் இரண்டு பிரிட்டிஷ் அதிகாரிகள் அந்த நிறுவனம் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து பார்வையிடுவதற்காக இன்று யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர். [உ-3]

## 'லங்காசிறி' சென்றது; 'குமண' வரும்!

யாழ்ப்பாணம், ஜன. 3
பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்துக்கொண்ட 'லங்காசிறி' கப்பல் நேற்று மாலை கொழும்பு திரும்பியது.

இந்தக் கப்பல் கால நிலை சீர் இல்லாத காரணத்தால் வழமையைவிட அதிக நாட்கள் தரித்து நின்று பொருள்களை இறக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

'குமண' கப்பல் இன்னும் இரண்டொரு தினங்களில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-3)

## பாடசாலை ஆரம்பம்

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் நேற்று முதலாம் தவணைக்காக மீள ஆரம்பமாகின.

மாணவர் வரவு கணிசமாக இருந்ததாக அதிபர்கள் தெரிவித்தனர். (ஓ 3)

## ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 3
வடமராட்சிக் கோட்டத்தில் கடமை ஆற்றும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணி அளவில் நடைபெறும். [இ]

## சீனாவில் சினிமா சென்ற 18 பேர் பலி!

பீகிங், ஜன. 3
சீனாவில் புத்தாண்டு தினத்தன்று படமாளிகை ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் 18 ரசிகர்கள் உயிரிழந்தனர். சுமார் 100 பேர் காயமடைந்தனர்.

அந்த படமாளிகையில் ஒரு வாசலினால் தான் ரசிகர் பிரவேசிக்கவும், வெளியேறவும் வேண்டியிருந்தது. அதனால் தான் நெரிசல் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. [ஒ-எ]

## தங்கை அடித்ததால் வந்த வினை!

தென்மராட்சி, ஜன. 3
தங்கை அடித்ததால் மனமுடைந்த மூத்த சகோதரி நச்சு விதையை அரைத்துச் சாப்பிட்டார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை மீசாலை தெற்கில் இடம்பெற்றது.

சம்பந்தப்பட்ட யுவதி ஆபத்தான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-117)

## உலகப் போரை ஒத்தது வளைகுடா நெருக்கடி!
### புஷ்ஷின் மதிப்பீடு இது

வளைகுடா நெருக்கடி, இரண்டாம் உலக மகா யுத்தத்தை ஒத்ததாக அமைந்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் சொன்னார்.

தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் ஜனாதிபதி புஷ் இத்தகவலை வெளியிட்டார்.

ஈராக் மீது போர் தொடுப்பது என்ற முடிவை அமெரிக்கா எடுப்பின, அந்தப்போர் பிரமாண்டமானதாகவே இருக்கும் என்றும் திரு. புஷ் அப்பேட்டியில் தெரிவித்தார். [ஒ-எ]


## அந்தியேட்டி அழைப்பிதழும் நினைவஞ்சலியும்

மலர்வு: 04 — 01 — 1932



உதிர்வு: 07 — 10 — 1990

### இரத்தினசாமி (கற்கண்டு)

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் வல்வெட்டித்துறை மாவடி இல்லத்தில் 03 - 01 - 1991 வியாழக்கிழமை நடைபெறும். நண்பர்கள், தோழர்கள், உறவினர்கள் யாவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

– குடும்பத்தினர்.

மாவடி,
வல்வெட்டித்துறை. [1ç359]


## வீடுகள் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3
மட்டக்களப்பு சோயில் போரதீவில் கடந்த 24 ஆம் திகதியன்று மூன்று தமிழர்களின் வீடுகளை இராணுவத்தினர் குண்டுவைத்துத் தகர்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம்-
சவளக்கடை முதலாம் குறிச்சியில் கடந்த 21 ஆம் திகதி தமிழர் ஒருவரின் வீடு குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. (உ)

## மன்னாருக்கு கப்பல்

மன்னார், ஜன 3
உணவு, உரம் மற்றும் அத்தியாவசிய பொருள்களை ஏற்றிக் கொண்டு ''விங்கோ ரேட்ஸ்'' கப்பல் நாளை மன்னாருக்கு வரவிருக்கிறது. (உ-3)

## தபாற் கட்டளைகள் இனிமேல் இல்லை!

தபாற் கட்டளை [Postel Order] முறை சென்ற முதலாம் திகதி முதல் நீக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் நேற்று அறிவித்தது.

பணம் அனுப்புவதற்கு காசுக் கட்டளை முறை தொடர்ந்து அமுல் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

சென்ற டிசம்பர் 31 ஆம் திகதிவரை பெற்ற தபாற்கட்டளைகள் எதிர் வரும் ஜூன் வரை செல்லுபடியாகும் என்றும் தபால் திணைக்களம் அறிவித்து உள்ளது. [உ-எ]

## களஞ்சியத்தில் மருந்து காலி!

யாழ்ப்பாணம், ஜன 3
யாழ் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின்கீழ் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அரச மருத்துவமனைகளில் முக்கிய மருந்து வகைகள் சில முற்றாக முடிந்துவிட்டன. ஏனைய மருந்து வகைகளும் முடியும் தறுவாயில் உள்ளன.

பிராந்திய சுகாதாரத் திணைக்கள மருந்துக் களஞ்சியம் வெறுமையாகக் கிடக்கிறது.

சுகாதாரத்திணைக்கள வட்டாரங்கள் இந்தத் தகவல்களை வெளியிட்டன.

சாதாரண நோயாளர்களுக்குக் கூட போதியளவு மருந்தை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் —

''கப்பல் வந்தாலே மருந்து'' என்ற நிலையே நிலவுகிறது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-6]

## எர்ஷாத் வீட்டிலிருந்து மேலும் சொத்துகள் மீட்பு

டாக்கா, ஜன. 3
பங்களாதேஷின் முன்னைள் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் வசித்த வீட்டைச் சோதனையிட்ட அதிகாரிகள், அங்கிருந்து 50 லட்சம் அமெரிக்க டொலர் பணத்தைக் கைப்பற்றினர் என்று அறிவிக்கப்பட்டது.

ஆயிரத்துக்கு அதிகமான விலையுயர்ந்த ஆடைகள் மற்றும் 16 துப்பாக்கிகளும் அப்போது கைப்பற்றப்பட்டன. துப்பாக்கிகளில் சில லைஸன்ஸ் பெறாதவை என்றும் சொல்லப்பட்டது.

இந்த வாசஸ்தலத்தில்தான் ஜெனரல் எர்ஷாத் வசித்து வந்தார். பதவி விலகியதும் இங்கு வைத்தே அவரைப் பொலீஸார் கைது செய்தனர். [உ-எ]

## இந்தியப் பிரதமருக்கு ஈராக் விசேட செய்தி
### இணை அமைச்சர் டில்லிக்கு

ஈராக்கிய ஜனாதிபதியின் விசேட தூதராக பாதுகாப்பு இணை அமைச்சர் முகமட் செய்யித் அச்சபா நேற்று விசேட விமானத்தில் புதுடில்லி போய்ச் சேர்ந்தார்.

ஜனாதிபதி சதாம் ஹுசேன் இந்தியப் பிரதமருக்கு விசேட செய்தி ஒன்றை அவர் மூலம் அனுப்பி வைத்திருக்கிறார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் ஓர் உறுப்பினராக இந்தியாவும் சென்ற முதலாம் திகதியில் இருந்து அங்கம் வகிப்பது தெரிந்ததே. [ஒ-எ]

## ஆயுள்வேத மருந்தில் மக்கள் ஆர்வம்

காங்கேசன்துறை, ஜன 3
இக்கட்டான இன்றைய காலகட்டத்தில் அனேகமான மக்கள் வைத்திய சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக இலவச சித்த, ஆயுள்வேத வைத்தியசாலைகளை நாடி வருகின்றனர்.

ஆங்கில மருந்து வகைகளின் தட்டுப்பாடு, விலையேற்றம், தரமற்ற மருந்து விற்பனை ஆகியன காரணமாகவே மக்கள் ஆயுள்வேத வைத்தியசாலைகளை நாடுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

உடுவில் பிரதேச சபை உப அலுவலக இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலைக்கு தினமும் ஏராளமான மக்கள் வைத்திய சேவையைப் பெறச் செல்கின்றனர்.

இதே போன்று குடாநாட்டின் ஏனைய ஆயுள்வேதவைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெறும் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. [இ 68]

## வெங்காய செய்கையில் விவசாயிகள் நாட்டம்

கரவெட்டி, ஜன. 3
வடமராட்சிப் பகுதியில் இம் முறை வெங்காயச் செய்கையிலேயே அனேகமானோர் கவனம் செலுத்தி வருகின்றனர்.

தென் இலங்கையில் இருந்து வரும் யூரியா, ரி. டி. எம், என். பி. கே. அமோனியம், சல்பேட் போன்ற செயற்கைப்பசளை வகைகள் தடைப்பட்டதால் வழமையான விவசாய நடவடிக்கைகளைப் பலரும் கைவிட்டுள்ளனர்.

இப்பகுதியில் கிடைக்கும் இயற்கை உரம் மூலமே தற்போது வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது

---

கட்சி..

சந்திப்பார் என்று தகவல் வெளியிட்ட ஜனாதிபதி செயலகம், அச்சந்திப்பு தனித்தனியாக நடக்குமா அல்லது கூட்டாக இடம் பெறுமா என்பதைத் தெளிவுபடுத்தவில்லை [உ-எ]

---

## ஆயுதங்களை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பட்டிருக்கின்றதா என்பதையும், அடுத்து அந்த அமைப்பு உண்மைத் தன்மை நோக்கம் கொண்டதா என்பதையும் நாம் கண்டறிய வேண்டும்.

விடுதலைப் புலிகளின் அறிக்கை ''ஈழம்'' பற்றிக் கூறுவதை அரசு கவனிக்க வேண்டும். எந்தப் பேச்சும் இலங்கையின் ஐக்கியத்தைப் பேணுவதாகவே இருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளினால் ஏமாற்றப்படக்கூடாது என்பதை அரசு உறுதிசெய்ய வேண்டும் — இவ்வாறு அவர் மேலும் கூறினார்,

இதே கருத்தையே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று ஜனாதிபதியைச் சந்திக்கும் போது உத்தியோகபூர்வமாக வெளியிடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. [உ-3]

## தமிழருக்கு கத்திக்குத்து

யாழ்ப்பாணம், ஜன. 3
புதுவருடப் பிறப்பன்று நண்பகல் 11 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் 35 ஆம் கிராமத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த தமிழர் ஒருவர் இராணுவத்தினரால் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது (உ)

## மினி பஸ் சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3
குடாநாட்டிற்குள் மினிபஸ் சேவைகள் நேற்று ஓரளவு நடைபெற்றன.

பருத்தித்துறை, சாவகச்சேரி, மாதகல் அராலி, காரைநகர் ஆகிய பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மினிபஸ் சேவைகள் நடைபெற்றன.

இச்சேவை இன்று மேலும் விஸ்தரிக்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன. 3
கடந்த அக்டோபர் 17 ஆம் திகதி பலாலி இராணுவத்துடனான நேரடி மோதல் ஒன்றில் காயமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் றோய் [சிற்றம்பலம் மகேந்திரராஜா - மயிலிட்டி] கடந்த 31 ஆம் திகதி வீரமரணமடைந்தார். (உ-3)

## பெண்கள் மீது வன்முறை

யாழ்ப்பாணம், ஜன. 3
கடந்த வெள்ளிக்கிழமையன்று அம்பாறை மாவட்டம் பக்கியெல்ல இராணுவ முகாமிலிருந்து வந்த இராணுவத்தினர் மட்டக்களப்பு மாவட்டம் 37 ஆம் கிராமத்தில் 3 பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## கிரிக்கெட் நாளை

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் நாளை வெள்ளிக்கிழமை கல்கத்தாவில் இந்திய, இலங்கை அணிகளுக்கு இடையே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இப்போட்டி இன்று வியாழன் நடைபெறுவதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அவகாசம் எதற்கு?

தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்த யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதா, இல்லையா? இது குறித்து ஆராய்ந்து முடிவு செய்வதற்கு அரசாங்கத்திற்கு மூன்று நாள் அவகாசம் தேவைப்படுகிறது.

போர் நிறுத்த அழைப்பின் சகல அம்சங்களையும் மதிப்பிட வேண்டும். அழைப்பின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளவேண்டும். அதனாலேயே அரசு ஒரு முடிவுக்கு வருவதற்கு மூன்று நாள் அவகாசம் தேவைப்படுகிறது என்று ஜனாதிபதி செயலகம் உத்தியோகபூர்வமாகக் காரணம் தெரிவித்திருந்தது.

உண்மை நிலையை உன்னிப்பாக ஆராய்ந்தால், அறிவிக்கப்பட்டவை மேற்படையான காரணங்கள், உள்ளார்ந்த காரணங்கள் வேறு.

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்துக்கு அழைத்து, அரசாங்கம் ஏற்றுக்கொள்வது என்பது, இராணுவ ரீதியாக அரசுக்குத் தோல்வி உண்டானதால் தான் என்ற முடிவுக்கு வர வழிசெய்யும்.

அது சிங்கள மக்களிடையே, அரசாங்கத்துக்கும், ஆளும் கட்சிக்கும் உள்ள ஆதரவைக் குறைத்து விடலாம்.

வெற்றிபெற முடியாத ஒரு யுத்தத்துக்கு கோடானு கோடி ரூபா பணத்தையும், பல சிங்கள இளைஞர்களின் உயிர்களையும் இழந்திருக்க வேண்டுமா? அதன் விளைவாக நாடு பொருளாதாரத் துறையில் பின்நோக்கிச் செல்ல வேண்டுமா?- இவ்வாறான வாதங்களை முன் வைத்து எதிர்க்கட்சிகள் அரசியல் லாபம் தேடி விடக்கூடும்.

அதனைத் தடுக்க, தவிர்க்க ஒரு வழி கண்டாகவேண்டும். அதற்காகவே அரசுக்கு அவகாசம் தேவைப்பட்டது.

யுத்தத்தைத் தொடங்கும் போது எதிர்க்கட்சிகளைக் கலந்தாலோசித்தோ அல்லது வெளி உலகத்தின் அபிப்பிராயத்தைக் கேட்டோ அரசு ஆரம்பிக்கவில்லை. மகாநாயக்க தேரர்களுக்கு அறிவித்து விட்டுத் தொடங்கி இருக்கும் என்பதும் சந்தேகம்.

அவ்வாறிருக்க, யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கு மட்டும் எதிர்க்கட்சியினரையும், மகாநாயக்க தேரர்களையும் கலந்தாலோசிப்பது ஏன்?

அவர்கள் தென்னிலங்கை மக்களை குழப்பி, ஆளும் கட்சியின் ஆதரவைக் கெடுத்துவிடக் கூடாதே என்ற அக்கறையுடன் தான், இந்த உத்திகள் யாவும்.

அமைதியை விரும்பும் ஓர் அரசாங்கம், சமாதானத்தை நேசிக்கும் ஒரு தலைவன், போரை நிறுத்துவதற்கு மற்றவர்களின் அபிப்பிராயம் கேட்பது ஏன்? அது சம்பந்தமான முடிவை அறிவிப்பதற்கு அவகாசமும் தேவைப்படுவது ஏன்?

அரசாங்கத்தின் இலட்சியம் நாட்டின் அமைதியும், சுபீட்சமும் தானெனில், என்ன விலை கொடுத்தும் அவற்றை வாங்கித் தான் ஆகவேண்டும். அரச பதவி, கட்சி நலன் ஆகியவை குறித்து அக்கறை கொள்ளத் தேவையில்லை.

நாட்டின் அமைதி, மக்களின் நல்வாழ்வு ஆகியவற்றை முந்திக் கொண்டு, பதவி நலனும், கட்சி நலனும் முதலிடம் பிடித்தால் இந்த நாடு முன்னேறுவது எப்படி?

# மீண்டும் ஐக்கியத்தை ஏற்படுத்த முயல்வோம்

## கண்டியில் பிரேமா உரை

கண்டி, ஜன. 3

எமது முன்னே உள்ள பணிகள் ஏராளம். தாயகம் பிளவுபடுவதை நாம் தடுக்கவேண்டும். நாட்டில் உள்ள அனைத்துச் சமூகத்தினர் மத்தியிலும் நிலையான ஐக்கியத்தை மீண்டும் கொண்டுவர நாம் உழைக்கவேண்டும்.

ஜனாதிபதி பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி பதவி ஏற்ற இரண்டாவது ஆண்டுநிறைவு நாள் நிகழ்ச்சி நேற்று கண்டி தலதா மாளிகை எண்கோண மண்டபத்தில் இடம்பெற்றது.

அமைச்சர்கள், ராஜதந்திரிகள், முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

முக்கிய பிரமுகர்கள் வரிசையில் பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸும் காணப்பட்டார்.

இந்த நிகழ்ச்சியில் ஜனாதிபதி பிரேமதாஸா மும்மொழிகளிலும் பேசினார்.

ஜனாதிபதி மேலும் பேசியதாவது:-

வன்செயலால் அழிக்கப்பட்ட நாட்டை மீண்டும் கட்டி எழுப்புவேன் என்று நான் ஜனாதிபதியாக முதல் தடவையாக பதவி ஏற்றபின்னர் இந்த எண்கோண மண்டபத்தில் இருந்து உறுதி கூறினேன்.

அனைத்து மக்களுக்கும் நாம் உடல்ரீதியானதும், உளரீதியானதுமான பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

இப்பெரும்பணி அரசியல் வேறுபாடுகளுக்கும் பாரபட்ச நடவடிக்கைக்கும் அப்பாற்பட்டது;

ஒவ்வொரு இலங்கைப் பிரசையின் கைகளும், இதயமும் இப்பணியில் ஒருமித்துச் செயற்பட்டால் இதனை நிறைவேற்றுவது கடினமான காரியமல்ல.

எமது பார்வை, ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்டது; பிரிவினையை அடிப்படையாக கொண்டதல்ல. எமது இலட்சியம் திறமைக்கும் தகுதிக்கும் மட்டுமே இடம் கொடுப்பதாக அமைய வேண்டும்.

துவேஷத்தின் ஏஜண்டுகளால் இந்த இலட்சியம் கறைபட நான் அனுமதிக்க மாட்டேன்.

ஜனநாயகம் வளர துணிச்சல் தேவைப்படுகின்றது.

இப்படி ஜனாதிபதி கூறினார். (இ-எ)

# வடக்கில் கால்நடை பெருக்கம் பெருமளவு பாதிப்பு

கோக்குவில், ஜன. 3

சமீபத்திய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ். மாவட்டத்தில் கால்நடைகளின் பெருக்கம் பெருமளவு குறைந்துள்ளது.

குறை மாதத்தில் குட்டி ஈனும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

தவிடு, பிண்ணாக்கு மற்றும் கால்நடைத் தீன் வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவு

## பால் உற்பத்தியும் வீழ்ச்சி

வதால் பால் சுரப்பதும் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போஷாக்கு இன்மையால் கால்நடைகள் இலகுவில் நோய்வாய்ப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-69)

## ஹெல்மட்

கொழும்பு, ஜன. 3

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் மீண்டும் தலைக்கவசம் அணிந்திருக்க வேண்டும் என்று பொலிஸ் தலைமையகம் பணித்து இருக்கிறது. செவ்வாய்க்கிழமை முதல் இது நடைமுறைக்கு வந்துள்ளது, (இ-எ)

## நிறுவை அளவுகள்:

# முத்திரையிடத் தவறினால் நடவடிக்கை எடுக்கப்படும்

கொழும்புத்துறை, ஜன. 3

சகல வியாபாரிகளும் தமது தராசுப்படிகள் அனைத்தையும் நேரில் கொண்டு வந்து முத்திரையிட வேண்டும். தவறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். மாவட்ட நிறுவை அளவுப் பிரிவுச் செயலக ஆணையாளர் திரு. எஸ். நித்தியராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிறுவையளவு உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகளை யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்கள நிறுவையளவுப் பிரிவு மீண்டும் ஆரம்பித்துள்ளது.

புதன்கிழமைகளில் யாழ். செயலகத்தில் காலை 8.30 முதல் பிற்பகல் 2.00 மணி வரை நிறுவைகள் அளவுகள், லீற்றர், மீற்றர் அளவுகள், மேடைத்தராசு, தூக்குத் தராசு போன்றவற்றுக்கு முத்திரையிட்டுக் கொள்ள முடியும். (இ-30)

# வட்டியில்லாக் கடனால் 26 விவசாயிகள் நன்மை

உரும்பராய். ஜன. 3

உரும்பராய் கிராம முன்னேற்றச்சங்கங்களின் ஒன்றியம் வழங்கும் வட்டி இல்லாக் கடன் திட்டத்தினால் இந்த வருடம் 26 ஏழை விவசாயிகள் பயன்பெறுகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் பணம் பெறுபவர்களை ஒன்றியத்தின் குழு தெரிவு செய்துள்ளது.

சென்ற வருடம் கடன் பெற்று உரிய தவணையில் திருப்பிச் செலுத்தியவர்களுக்கு திரும்பவும் 3 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்படவுள்ளது.

இப்பணம் இரண்டு தவணைகளில் 6 மாதங்களில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

இக்கடன் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு வேண்டிய பணத்தை தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் கடந்த வருடம் வழங்கி இருந்தது. (இ-154)

## நோய்கள் பரவும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். குடாநாட்டில் மூளைக்காய்ச்சல், நெருப்புக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவும் ஆபத்து இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் பொது மக்களை எச்சரித்துள்ளன. [இ-5]

## ஆஸ்பத்திரி "கன்ரீன்" திறந்து வைப்பு

யாழ். போதனா வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை [கன்ரீன்] திறந்துவைக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர் கூட்டுறவு நலவிருத்திச் சங்கத் தலைவர் திரு. எஸ். சிவரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இவ்வைபவத்தில் - போதனா வைத்தியசாலை நிர்வாகப் பணிப்பாளர் திரு பத்மநாதன் மங்கள விளக்கேற்றி வைக்க வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஷ்பா சண்முகம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார் [இ-15]

# நாளுக்குநாள் யுத்தத்தை நோக்கி நகரும் வளைகுடா நெருக்கடி

இருபதாம் நூற்றாண்டில் இடம்பெற்ற இரண்டு உலக மகா யுத்தங்களுக்கு இணையான பெரிய யுத்தம் ஒன்று வளைகுடாவில் ஏற்படும் ஆபத்து கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது.

இது தொடர்பான ஒரு கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.

வளைகுடா நெருக்கடியில் ஈராக் மீதான யுத்தத்திற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபை நாள் குறித்து விட்டது.

கொரியா யுத்தத்திற்குப் பின்னர் ஐ. நா. பாதுகாப்புச் சபை, ஒரு நாட்டுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட ஏனைய நாடுகளுக்கு அனுமதி அளித்து இருப்பது இது இரண்டாவது தடவைஆகும்.

### நெருக்கடி வரலாறு

கடந்த ஆகஸ்ட் இரண்டாம் திகதி குவைத் மீது ஈராக் படை எடுத்தது.

பின்னர் பத்தொன்பதாவது மாகாணமாக குவைத்தை, ஈராக் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

அதனைத் தொடர்ந்து குவைத்தில் இருந்து ஈராக் படைகளை ராஜதந்திர நெருக்குதல் மூலம் வெளியேற்ற அமெரிக்காவும் அதன் ஏனைய நேசநாடுகளும் நடவடிக்கை எடுத்தன.

இதன் பலனாக ஈராக் மீது தரை, கடல் மற்றும் வான் மார்க்க பொருளாதார முற்றுகையை ஐ. நா பாதுகாப்புச் சபை பிரகடனப்படுத்தியது.

### ஐ. நா. அனுமதி

பொருளாதார நிர்ப்பந்தங்கள் பலனளிக்காமற் போகவே இராணுவ பலத்தைப் பிரயோகித்து குவைத்தில் இருந்து ஈராக் படைகளை வெளியேற்ற ஐ. நா. பாதுகாப்புச் சபை அனுமதியளித்திருக்கிறது:

இதற்கான காலக்கெடுவாக ஜனவரி 15 ஆம் திகதியை ஐ. நா. பாதுகாப்புச் சபை நிர்ணயித்தது.

யுத்தம் நடத்த ஐ. நா அனுமதி அளித்த மறுகணம், ஈராக்குடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்தார். இந்த அழைப்பை ஈராக் ஏற்றுக் கொண்டது.

இது அமைதி விரும்பும்

### செய்திக்குப் பின்னால்

மக்கள் மனதில் நிம்மதியை ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து, குவைத் படையெடுப்புக்குப் பின்னர் ஈராக் மற்றும் குவைத் நாடுகளில் பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் பக்தாத் அரசு நிபந்தனை இன்றி விடுவித்தது.

இத்திருப்பங்கள் அமெரிக்க —ஈராக்நாடுகளுக்கு இடையே சுமுகமான பேச்சுக்களை ஆரம்பிக்க உதவும் என்று உலகில் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் நடந்ததோ வேறு. ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் பக்தாத்திலும் பேச்சுக்களை நடத்துவதற்கான திகதிகளை நிர்ணயம் செய்து கொள்வதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

ஜனவரி 3 ஆம் திகதிக்கு முன்னர் தனது வெளியுறவு அமைச்சர் பக்தாத் சென்று பேச்சுக்கள் நடத்த தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்தது.

ஆனால ஈராக்கோ, பேச்சு நடத்த அமெரிக்க அமைச்சர் ஜனவரி 12இல் தான் பக்தாத் வரவேண்டும் என்று அறிவித்தது.

காலக்கெடுவிற்கு மூன்று நாள் முன்பதாக என்ன பேச்சு என்று கூறி பக்தாத்தின் அழைப்பை அமெரிக்கா நிராகரித்தது

அதில் இருந்து மீண்டும் வளைகுடா நெருக்கடி யுத்தத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

### அமெ: படைகள் முஸ்தீபு

இரண்டு விமானந் தாங்கிக் கப்பல்கள், பதினேழு போர்க் கப்பல்கள் ஆகியவற்றுடன் 16 ஆயிரம் போர் வீரர்களை ஒரே தரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை [28-12-1990] கடைசியாக வளைகுடாவுக்கு அமெரிக்கா அனுப்பி வைத்தது.

எல்லாமாக வளைகுடாவில் நான்கு லட்சம் அமெரிக்கப் படைகள் நிலைகொண்டுள்ளன.

இவற்றை விட அமெரிக்காவின் நேசநாடுகளைச் சேர்ந்த படைகளும் வளைகுடாவில் ஆயத்த நிலையில் உள்ளன.

இதேவேளை — ஈராக்கிடம் பெருமளவில் இரசாயன ஆயுதங்களும், நுண்ணுயிர்க்கிருமிகளைக் கொண்ட ஆயுதங்களும் இருப்பதாக அமெரிக்க சி. ஐ. ஏ. நிறுவனம் கூறியுள்ளது.

ஈராக் இதனை மறுத்த போதிலும், இந்த ஆயுதங்களின் பாதிப்பில் இருந்து தமது படை வீரர்களைக் காப்பாற்ற அமெரிக்காவும், பிரிட்டனும் தீவிரத் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

கிருமி ஆயுதங்களின் எதிர் விளைவுகளாக வயிற்றோட்டம், நெருப்புக்காச்சல் ஏற்படும் ஆபத்து உள்ளது.

இந்நோய்கள் படை வீரர்களுக்கு வராமல் தடுக்க அவர்களுக்குத் தடுப்பு ஊசிமருந்து ஏற்றும் வேலையை அமெரிக்காவும். பிரிட்டனும் ஆரம்பித்து விட்டன.

இரசாயன ஆயுதங்களில்

**தீபன்ராஜா**

இருந்து வீரர்களைப் பாதுகாக்க, அவர்களுக்கு விசேட உடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஈராக்கும் குவைத்தில் 5 லட்சம் படையினரை குவித்து வைத்து உள்ளது. தரையில் இருந்து தரைக்குப் பாயும் ஏவுகணைகளையும் ஈராக் பரீட்சித்துப் பார்க்கத் தொடங்கியுள்ளது.

இரண்டு உலக மகாயுத்தங்களைக் கண்ட இந்த நூற்றாண்டு, கொரிய யுத்தம் அரபு — இஸ்ரவேல் யுத்தங்கள், ஈரான் - ஈராக் யுத்தம் போன்ற யுத்தங்களையும் சந்தித்தது.

இன்னும் சிறிய யுத்தங்கள் உலகின் பல பகுதிகளில் தற்போது இடம்பெற்று வருகின்றன. என்றாலும் இன்னொரு உலக மகா யுத்தம் என்று சொல்லமுடியாவிடினும், மிகப்பெரிய யுத்தம் ஒன்றைச் சந்திக்க உலகம் தயாராகி வருகின்றது.

### இரசாயன ஆயுதங்கள்

நடந்து முடிந்த யுத்தங்களில் பாவிக்கப்பட்ட ஆயுதங்களிலும் பார்க்க பயங்கரமான ஆயுதங்கள், வளைகுடா யுத்தத்தில் பயன்படுத்தப்படக்கூடிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இரசாயன ஆயுதம், நுண்ணுயிர்க்கிருமி ஆயுதம், அணுவாயுதம் ஆகியன பாவிக்கப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் ஈராக் தரப்பில் இருந்து தென்படுகின்றன.

அணு யுத்தம் ஒன்றுக்கு முன்னோடி யுத்தமாக வளைகுடா அமையலாம் என்பது யுத்த நிபுணர்களின் கருத்தாகும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஜேர்மன் சர்வாதிகாரி ஹிட்லருக்கு எதிராக, வல்லரசுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் ஓரணியில் நின்றன.

வளைகுடா நெருக்கடியில் ரஷ்யாவின் படைகள் நேரடியாக ஈடுபடும் வாய்ப்பு இன்னும் ஏற்படவில்லையாயினும் -

வல்லரசுகள் அனைத்தும் கருத்தளவில் ஒன்றுபட்டுச் செயற்படுகின்றன.

வல்லரசுகளின் பனிப்போர் முடிந்துள்ள காலகட்டத்தில் வளைகுடாப் போர் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஈராக் தலைமையில் மனமாற்றம் ஏற்பட்டு ஏதேனும் திடீர் திருப்பங்கள் உருவானால் ஒழிய, வளைகுடாப் போர் நடந்துதான் தீரும் நிலை தோன்றி விட்டது.

அப்படி வளைகுடாப்போர் ஏற்படின்-

— அமெரிக்காவின் நலன்கள் மத்திய கிழக்கில் பாதுகாக்கப்படுமா?

— அரபு நாடுகளின் தலைமையை ஈராக் பெறுமா?

— நாடிழந்து தவிக்கும் பலஸ்தீனியர்கள் இழந்த தாயகத்தை மீண்டும் பெறுவார்களா?

இக் கேள்விகளுக்கான பதிலை உலகம் எதிர்பார்த்து இருக்கிறது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனை

வர்த்தகமும் நிதியும் [உயர்தர வகுப்புகளுக்குரியது] உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் ஆகியன வற்றுடன் வெளிவந்து விட்டது. தொகுப்பு: தேவராஜன், ஜெயராமன் B. Com (Hons) விலை ரூபா 48/- வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-5583]

## மல்லிகை விற்பனையாகின்றது

டிசம்பர் இதழ் வெளிவந்து விற்பனையாகின்றது. துர்க்கா துரந்தரியின் உருவத்தை அட்டையில் தாங்கி வெளிவந்துள்ளது இந்த இதழ். எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். தொடர்ந்து வாசியுங்கள். விலை ரூபா 6/- (சி-5580)

## FUDO - TYPEWRITERS

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் FUDO 39/17, மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணக் கிளை, பிரதான வீதி, மானிப்பாய். [சி-5585]

## ஆங்கில வகுப்பு

இடை நிறுத்தி வைக்கப் பட்டிருந்த ஆங்கில வகுப்பு மீண்டும் 5 - 1 - 1991 சனி காலை 11.00 மணிக்கு 204, மானிப்பாய் றோட், ஓட்டு மடத்தில் ஆரம்பமாகும். ஆசிரியர் [15329]

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் Y.M.C.A. கட்டிடத் தொடரில் ஒரு கடை வாடகைக்கு உள்ளது. விவரங்களுக்கு; பொதுச் செயலாளர், Y. M. C. A. யாழ்ப்பாணம். [சி 5581]

## தேவை

தேனீர் தயாரிப்பதில் திறமை உடையவரும், இடியப்பம் தயாரிப்பதிலும், குசினி வேலைகளிலும், நன்கு அனுபவம் உள்ளவர்களும் நேரில் வரவும். ஹோட்டல் றொலக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [15358]

## வைத்திய சேவை

S. P. சாமி அன் கொம்பனி சென்றல் கிளினிக் [வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம்] புதன்கிழமை [2-1-91] முதல் பழைய கட்டடத்திற்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 193 A, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். [15340]

## A/L கணக்கியல் நூல்கள்

1. கம்பனி முடிவுக் கணக்குகளும் பகுப்பாய்வும், 2. கம்பனிக் கணக்குகள்; ஆக்கம்: க. தங்கராஜா B,Sc. P.F.T. Sp, Dip-in-ED. யாழ் நகர், நல்லூர் புத்தகசாலைகளில் தொகையாக வாங்குவோர்க்கு விசேட கழிவு உண்டு. [14911]

## நாற்றுக் கன்றுகள்

எம்மிடம் சிறந்த இன விதை எலுமிச்சை, ஒட்டுத் தோடை, ஒட்டு எலுமிச்சை மா, பலா நாற்றுக்கன்றுகள் விற்பனைக்கு உண்டு. ஐம்பது நாற்றுகளுக்கு மேல் தொகையாக எடுப்பவர்களுக்கு சழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/5584)

## வைத்திய சேவை

சம்பந்தன் வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம் [யாழ். ஆஸ்பத்திரி, பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக, சாந்தி தியேட்டர் அருகே] முன்பு நடைபெற்ற இடத்தில் வழமைபோல் நடைபெறுகின்றது. [15295]

---

# இன்று ஆரம்பம்

# NEW SCIENCE ACADEMY

KANNATHIDY, — JAFFNA.

## 90, 91, 92 A/L

PURE | MATHS
APPLIED |

By

சந்ரதிமோகன்

03 - 01 - 1991 Thu. 2.00 P.m (15356)

---

# மரண அறிவித்தல்

## திருமதி சோமசுந்தரம் இலட்சுமி

திருமதி சோ. இலட்சுமி 02-01-1991 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தர் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் திரு. தியாகராஜா (ஓய்வு பெற்ற நியனைப்பு உத்தியோகத்தர்), திரு. சண்முகலிங்கம், திரு. கனகலிங்கம் (ஜேர்மனி), திருமதிகள் சொர்ணம். சமலாம்பிகை, சரோஜினி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு. நாகராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற திரு. பூபாலசிங்கம், திரு. அருளானந்தம் (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), திரு. இராஜதுரை, திருமதி சரஸ்வதி, திருமதி மகாதேவி (ஆசிரியை, யாழ் / இந்து மகளிர் கல்லூரி), திருமதி தையல்நாயகி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03-01-91 காலை 10.30 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இராஜதுரை

முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. [15201]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 3 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது]

---

# A/L 91, 92

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

## 05 - 01 - 1991

சனிக்கிழமை பி. ப. 2 30 மணி

| | |
|---|---|
| Physics | — திரு. வர்ணம் |
| Chemistry | — திரு. சிவ்லை |
| Botany | — திரு. நேசன் |
| Zoology | — திரு. நாகநாதன் |
| Pure Maths | திரு நல்லையா |
| Applied Maths | திரு. கிருஷ்ணா |

## NEW MASTER INSTITUTE

B. M. C. Lane, JAFFNA.

[சி-5579]

---

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்பிரிவு

# சுதேசிய பொருள் விற்பனை நிலையம்

தைப்பொங்கல் தினம் (14-01-1991) ஆரம்பிக்கப்படவிருக்கும் எமது சுதேசிய பொருள் விற்பனை நிலையத்தில் தமது தயாரிப்புகளை அறிமுகப் படுத்தவோ, விற்பனை செய்யவோ, விரும்பும் அரச/ அரசசார்பற்ற நிறுவனங்கள், தனிநபர்கள் எமது செயலகத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

– தலைவர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி-5589)

---

# பதவி வெற்றிடம்

## புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ. து.

### பொது இலிகிதர் தரம் 111

1. கல்வித் தகைமைகள்
   தமிழ் மொழி, கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச்சித்தியுடன் கூடிய க. பொ. த. (சா. த) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. சம்பளத்திட்டம்: 730 - 1055
   20 x 10-25 x 5 இதர படிகளும்,
3. வயதெல்லை:
   18 - 30, (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
4. பிணைரொக்கம்:
   1000/-
5. விண்ணப்ப முடிவுத் திகதி:
   18 - 01 - 1991

விண்ணப்பங்கள் தலைவர், புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்,
புங்குடுதீவு-நயினாதீவு, ப. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு.
(சி/5586)

---

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 17 — 07 — 1918



மறைவு: 03 — 01 — 1990

அமரர்

## திரு. மோசஸ் சின்னையா சின்னத்தம்பி

அன்பின் திருவுருவாய் அனைவரையும் நேசித்து அறிவுக்கு உரமூட்டும் ஆசிரியப் பணி புரிந்த அய்யாவே உங்கள் செயல் திறன்கள் முத்திரையை அஞ்சலியாய் பதிக்கின்றோம் எம்மிதய கமலங்களில்!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. [15353]

---

# அலுவலகப் பியோன்கள்

அலுவலகப் பியோன்களாகப் பணிபுரிவதற்கு ஆட்கள் தேவை. விண்ணப்பதாரர்கள் முன் அனுபவம் உள்ளவர்களாக இருப்பது விரும்பத்தக்கது. வயதெல்லை: 25 முதல் 35 வரை.

நற்சான்றுப் பத்திரங்களுடனும், தகைமைப் பத்திரங்களுடனும் இன்று நண்பகல் 12 மணிக்குப் பின்னர் நேரில் வரவும்,

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (C 5591)

---

# இயந்திர இயக்குநர்

Hand Feeding Baby Cylinder - அச்சு இயந்திரத்தை இயக்குவதில் தேர்ச்சியும், அனுபவமும் உள்ள இயக்குநர் தேவை.

திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். நற்சான்றிதழ்களுடன் அலுவலக நேரத்தில் வந்து சந்திக்கவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

---

# ★ KEEN ★

திருநெல்வேலி.

## A/L 92

பிரிவு 2

| | |
|---|---|
| பொருளியல் | — வரதராஜன் |
| வர்த்தகம் | — பிரபல விரிவுரையாளர் |
| அளவையியல் | — S. S. மனோகரன் |
| கணக்கியல் | — சௌந்தி |
| தமிழ் | — கனேஸ் |
| இந்து நாகரிகம் | — கிருஷ்ணா |
| புவியியல் | — பிரபல விரிவுரையாளர் |

ஆரம்பம்: 05 - 01 - 1991
சனி 2. 30 p. m.

## A/L 91 பொருளியல்

★ தேசிய வருமானம்
★ அரசாங்க வரவு செலவுத்திட்டம்

ஆரம்பம்: 06 - 01 - 1991
ஞாயிறு 12.00 மணி
(சி-5587)

---

# 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## திருமதி அமுதராணி (அமுதா) ராஜமூர்த்தி
## செல்வி பார்கவி (கவி) ராஜமூர்த்தி

தோற்றம்: 02 - 05 - 1967
03 - 09 - 1989
மறைவு: 07 - 10 - 1990



எதிர்பாராத படகு விபத்தில் பலியாகி எம்மை என்றும் கலங்க வைத்துச் சென்று மாதங்கள் மூன்றாகி விட்டன. ஆனால் இன்று எம்மால் உங்களை மறக்க முடியவில்லை. உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சங்களை விட்டு அகலாது.

எங்கள் துக்கத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்வரும் 04-01-91 வெள்ளி காலை 6 மணிக்கு ஊறணி மடத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ராஜமூர்த்தி (கணவன் - தந்தை) யும்,
குடும்பத்தாரும்.

ஊறணி குடியேற்றம்,
வல்வெட்டித்துறை. [14891]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org